# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg


| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம்<br>*frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ<br>*fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ்<br>*nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com*<br>*ololpastoral@gmail.com* |


| 13 மே 2018 | பாஸ்கா காலம் 7ம் ஞாயிறு | இரண்டாம் ஆண்டு |
|---|---|---|



அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

# உங்கள் சிந்தனைக்கு

அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

விண்ணகம் எழுந்து செல்வதற்கு முன் இயேசு கிறிஸ்து அவரது சீடர்களுக்கும், உலக மக்களுக்கும் ஓர் அருமையான இரகசியத்தை வெளிப்படுத்திச் சென்றார். அது என்ன இரகசியம்? நம்பிக்கைக் கொள்வோர் மீட்பு பெறுவர் என்பதுதான் அது.

பழைய ஏற்பாட்டில் நோவா வெள்ளத்திலிருந்து காப்பாற்றப்பட்டது நம்பிக்கையினால்! ஆபிரகாம் நம்பிக்கை கொண்டோரின் தந்தையாகியது நம்பிக்கையினால்! செங்கடல் இரண்டாகப் பிரிந்தது நம்பிக்கையினால்! வானத்திலிருந்து மன்னா பொழிந்தது நம்பிக்கையினால்! கற்பாறை இரண்டாகப் பிளந்தது நம்பிக்கையினால்! புதிய ஏற்பாட்டில் மரியா கடவுளின் தாயானது நம்பிக்கையினால்! யோசேப்பு நேர்மையாளரானது நம்பிக்கையினால்! நோயாளிகள் உடல் நலம் பெற்றது நம்பிக்கையினால்! பாவிகள் பாவமன்னிப்புப் பெற்றது நம்பிக்கையினால்! இறந்தவர் உயிர்பெற்று எழுந்தது நம்பிக்கையினால்! ஆம். உலகத்தை எல்லா துன்ப துயரங்களிலிருந்தும் விடுவித்து அதற்கு மீட்பளிக்கும் ஆற்றல் நம்பிக்கைக்கு உண்டு!

அமைதியான நதியினிலே ஓடம்! அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்! காற்றினிலும் மழையினிலும் கலங்க வைக்கும் இடியினிலும் கரையினிலே ஒதுங்கி நின்றால் வாழும்! அந்தக் கரைதான் நம்பிக்கை! இப்படிப்பட்ட நம்பிக்கையை நமது உள்ளத்திற்குள்ளும், இல்லத்திற்குள்ளும் ஊற்றிக்கொள்வோம்.

முனிவர் ஒருவர் ஒரு வெற்றுப்பானையை அவரது சீடர்கள் முன்னால் வைத்துவிட்டு, அவரது சீடர்களைப் பார்த்து, இதற்குள் என்ன இருக்கின்றது? என்று கேட்டார். சிலர், ஒன்றுமில்லை என்றார்கள். சிலர், இதற்குள் காற்று இருக்கின்றது என்றார்கள். முனிவர், காற்று இருக்கின்றது என்று சொன்னவர்களைப் பாராட்டிவிட்டு, இதற்குள் இருக்கும் காற்றை வெளியே எடுக்க முடியுமா? என்று கேட்டார். எல்லா சீடர்களும், முடியாது என்றார்கள். முனிவரோ, முடியும் என்றார். எப்படி? என்று சீடர்கள் கேட்டார்கள். அதற்கு முனிவர், இந்தப் பானைக்குள்ளே தண்ணீரை ஊற்றினால், இதற்குள்ளிருக்கும் காற்று வெளியேறிவிடும் என்றார்.

தூய ஆவியாரின் துணையோடு நம்பிக்கையையும், கடவுளின் வல்லமையால் ஆகாதது ஒன்றுமில்லை என்ற எண்ணத்தையும் நமது இல்லத்திற்குள்ளும், உள்ளத்திற்குள்ளும், மனதிற்குள்ளும் ஊற்றிக் கொண்டால் நாம் அனைவரும் மீட்கப்பட்டவர்களாய் இவ்வுலகில் உலா வருவோம். இனிதே வாழ்வோம். வாழ்த்துக்கள்.




# குருப்பட்ட ஆண்டு நிறைவு

நமது உதவிப் பங்குத் தந்தை அருட்திரு பவுல் யோ அவர்கள் தனது **26**வது குருப்பட்ட ஆண்டு நிறைவை வரும் **17-05-2018** (வியாழன்) அன்று கொண்டாடுகிறார். அவரது அருட்பணி சிறப்புடன் தொடர அவரை வாழ்த்துவோம்.




# ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணி

**நாள்: 20-05-2018, ஞாயிறு மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணி வரை மூடப்பட்டிருக்கும். நம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தத் தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கிறோம்.



# இடைவிடா சகாய அன்னை நவநாள்

**சனிக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு** தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும். அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.



# புனித வின்சென்ட் தே பவுல் காணிக்கை

கடந்த ஞாயிறு **06-05-2018** அன்று எடுக்கப்பட்ட காணிக்கையில் கிடைத்த தொகை **S$4,630.85** வசதியற்றோருக்கு வழங்கப்பட்ட தொகை **S$5,880.00** தாராளமாகக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.



## பெரியோருக்கான கிறிஸ்தவப் புதுமுக வகுப்புகள் (RCIA)

நமது கத்தோலிக்க நம்பிக்கையைப் பின்பற்றி வாழ விரும்புவோரை உங்களுக்குத் தெரியுமா? **26-06-2018** முதல் **RCIA** வகுப்புகள் ஆங்கிலத்தில் நடைபெற உள்ளது. செவ்வாய்க்கிழமைகளில் இரவு **7:30** மணிக்கு நடைபெறும் வகுப்புகளில் நீங்களும் ஆதரவாளர்களாகக் கலந்து கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

## GIFT திட்டத்திற்கான நினைவூட்டல்

அடுத்த வாரயிறுதித் திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாம் காணிக்கை நமது உயர்மறைமாவட்டத்தின் **GIFT** (நம்பிக்கையுடனும் நன்றியுணர்வோடும் கொடுத்தல்) திட்டத்திற்காக வழங்கப்படும். அதற்கான உங்கள் பங்களிப்புகளைக் கொண்டு வரும்படி அன்புடன் நினைவூட்டுகிறோம். இக்காணிக்கையானது நமது உயர்மறைமாவட்டத்தில் செயல்படும் பல்வேறு அமைப்புகளுக்காகவும் கட்டிடத் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படும். தாராள மனதுடன் கொடுக்கும் உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## தூய ஆவியார் பெருவிழா

தூய ஆவியார் பெருவிழாவை முன்னிட்டு நமது ஆலயத்தில் மூன்று நாட்கள்
ஆங்கிலத்தில் சிறப்புத் திருப்பலியும் செப வழிபாடும் நடைபெறும்.
நாள்: **16, 17, 18 மே 2018,** புதன், வியாழன், வெள்ளி, இரவு **7** மணிக்கு
வழிநடத்துவோர்: அருட்திரு மைக்கேல் சீத்தாராம் & அருட்திரு பவுல் இயோ
இதில் கலந்து தூய ஆவியாரின் கொடைகளைப் பெற்றிட உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| யு | தை | ந் | த | கு | ண் | பா | ச | ர் | ப |
| லி | ல | ய | க் | றை | ன் | சா | ச் | க | க |
| னே | நா | சு | ப | ணி | யா | ள | ர் | ஒ | ர் |
| ர் | தா | செ | ற் | மை | ண் | உ | க் | லை | வ |
| யூ | யா | ன் | லு | தை | ப் | வே | டு | ல் | த |
| அ | தி | நீ | பு | வா | ய் | ஞா | கொ | வி | ந் |
| ரி | மை | றை | ர் | ள | து | வி | ணீ | ற | ற |
| ய | ம | த் | தி | யா | லா | க | ட | வு | ளை |
| ணை | தை | வ | ட் | உ | ல் | றை | லி | ழி | க் |
| யை | வி | ஆ | ம் | ட | ரி | வ | ற | அ | ம |

1. உமது வார்த்தையே _________.
2. _________ எவரும் என்றுமே கண்டதில்லை.
3. உம் _________ நான் அவர்களுக்கு அறிவித்தேன்.
4. நன்கு பாதுகாத்தேன். அவர்களுள் எவரும் _________.
5. ஆண்டவர் தமது _________ விண்ணகத்தில் நிலைநிறுத்தியுள்ளார்.
6. தமது _________ நமக்கு அருளியதால் நாம் அவரோடு இணைந்திருக்கிறோம்.
7. _________ பதிலாக யாரைத் தெரிந்தெடுக்க வேண்டும் என இந்த இருவருள் ஒருவரை எங்களுக்கு காண்பியும்.
8. அவர்கள் இருவரை முன்னிருத்தினார்கள். ஒருவர் யோசேப்பு என்னும் பெயர் கொண்ட _________, மற்றவர் _________.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதலாம் வாசகம்:** | திருத்தூதர்பணிகள் 1 : 15 – 17, 20 – 26 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 103 : 1 – 2, 11 – 12, 19 – 20 |
| **பதிலுரை:** | ஆண்டவர் தமது அரியணையை விண்ணகத்தில் நிலைநிறுத்தியுள்ளார். |
| **இரண்டாம் வாசகம்:** | 1 யோவான் 4 : 11 – 16 |
| **நற்செய்தி வாழ்த்தொலி:** | அல்லேலூயா! அல்லேலூயா! 'நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன். உங்களிடம் திரும்பி வருவேன். உங்கள் உள்ளம் மகிழ்ச்சி அடையும்' என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா! |
| **நற்செய்தி வாசகம்:** | யோவான் 17 : 11 – 19 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை 10:00 மணி |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ்   | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.